களைச் செய்து கொடுக்கவும், அவர்கள் எப்போதுமே இத்தகைய ஆபத்துகளுக்கு உள்ளாகாத வகையில் ஆற்றங்கரையில் மேட்டுப் பகுதியில் அவர்களுக்கு வீடுகள் அமைத்துத் தரவும் நடவடிக்கைகள் எடுக்க மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா : தமிழக அரசின் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதற்காக நான் சலவைத் தொழிலாளர்கள் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. க. அருணாசலம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை 3-ஆம் தேதி இந்த அவையில் அளித்தபோது, நமக்கு 1984-85 ஆம் ஆண்டில் பற்றாக்குறையாக 167 கோடி ரூபாய் இருக்குமென்று தெரிவித்தார்கள். இந்த 167 கோடி ரூபாய் எப்படி வந்தது என்பது பற்றியும் விவரமான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1982-83 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட பற்றாக்குறை 89 கோடி ரூபாயாக இருந்தபோதிலும்கூட, அது இறுதியில் நான்கு கோடியாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த 167 கோடி ரூபாயும் எப்படியும் சரிக்கட்டப்பட்டுவிடும் என்று நினைத்தோம். ஆனால் ஐந்தாம் தேதி ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால், ஏற்பட்ட பேரிழப்பால் நம்முடைய பற்றாக்குறை இன்னும் அதிகமாக ஆகலாமென்று நினைக்கிறேன். இந்த இழப்புகள் எல்லாம் பொதுவாக, சாதாரணமாக நடந்ததையொட்டி, அதற்காக நம்முடைய அரசு நிவாரணம் அளிக்கிறது. ஆனால் பெரிய நகரங்களில் மட்டும் நிவாரணம் அளிக்கப்படுகிறது. நான் இம்மாதம் 11, 12 ஆம் தேதிகளில் பெரியகுளம் போயிருந்தேன். அங்குள்ள மக்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். 20, 30 வருடங்களில் இந்த மாதிரி வெள்ளம் ஏற்பட்டதில்லை என்று சொன்னார்கள். வராகன் மற்றும் பாம்பாற்றில் இம்மாதிரி வெள்ளம் இதற்கு முன்பு வந்ததில்லை என்று தெரிவித்தார்கள். சங்கணாபட்டி என்கிற கிராமத்தில் 100 குடும்பங்களுக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளன. 70 வீடுகள் அடியோடு போய்விட்டன. அங்கு நிவாரண வேலைகள் எல்லாம் நல்லபடியாக நடைபெற்று வருகின்றன. வராகன் ஆற்றின் நடுவில் சுவர்கள் நின்றுகொண்டிருக்கின்றன. சுவர்கள் ஆற்றின்

நடுவில் இருப்பதால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது என்பதை எடுத்துச் சொல்லி, சம்பந்தப்பட்டவர்களிடம் அதை அகற்றச் சொன்னால், அவர்கள் எங்களுக்கு சம்பந்தமே இல்லை என்று தெரிவித்தார்கள். இப்போது ஒரு கண்மாய் வழியாக பக்கத்தில் இருக்கிற கரையை அரித்துக்கொண்டு தண்ணீர் ஓடியதால், ஆற்றின் பாலத்தை மக்கள் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது. ஊரே இதன் காரணமாக துண்டிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அதை வெகு வேகமாக, துரிதமாக மூடிக்கொண்டு நிவாரண வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு அதிகமாகப் பணம் தேவைப்படும். பலர் நல்ல மாதிரியாக வேலை செய்துகொண்டிருக்கும் வேளையில், ஒருவர் வேறு விதமாக இருந்ததால்தான், இப்படி நடந்தது. இதற்காக என்று அங்கு ஹை வேசில் இருக்கிற ஒருவரை போய்ப் பார்த்துச் சொன்னபோது, அவர் எங்கள் கோரிக்கையைக் கவனிக்கவில்லை. ஆற்றின் நடுவில் இருக்கிற சுவரை உடனடியாக அப்புறப்படுத்தினால், இனிமேல் எதிர்காலத்தில் இப்படி நடக்காது என்று சொன்னபோது, "அது என்னுடைய வேலையல்ல, அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களிடம் போய்ச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டார். பொதுவாகவே பாம்பாற்றில் இவ்வளவு தண்ணீர் இதற்கு முன்பு எப்போதும் வந்ததே கிடையாது. அதற்குப் பக்கத்திலே காந்தி நகர் என்கிற நகர் இருக்கிறது. அங்கு பெரும்பான்மையாக ஆதி திராவிடர்களும் பின்தங்கிய மக்களும் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள வீடுகள் எல்லாம் தண்ணீரில் மூழ்கின. மூன்று அடி தண்ணீர் சுற்றிலும் இருந்தது. வீட்டின் நிலை, கதவுகள் எல்லாம் கீழே இறங்கிவிட்டன. அவற்றைச் செப்பனிட முடியாத நிலையில் மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காக 200 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டதன் மூலம் அவர்கள் பயனடைந்திருக்கிறார்கள். அங்குள்ள 20 சலவைத் தொழிலாளர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்பட்டன. அவர்களுடைய வீடுகளும் இடிந்து விழுந்தன. அவர்களை மேட்டுப் பாங்கான இடத்திற்குப் போகச் சொன்னதற்கு அவர்கள், "நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து 100 சலவைத் தொழிலாளர்கள் இருக்கிறோம், எங்கள் அனைவருக்கும் அம்மாதிரி வசதி ஏற்படுத்தித் தாருங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் பின்தங்கியவர்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் உதவி செய்ய வேண்டியிருப்பதால், 25 சதவிகிதம் தான் கொடுப்போம் என்று சொல்லுகிறார்கள். இந்த 100 சலவைத் தொழிலாளர்களுக்கும் இந்த உதவியைச்செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவர்களுக்காக டோபிகானா கட்டப்பட வேண்டும். இப்போதெல்லாம் பெரிய நகரங்களில் மட்டும்தான் இதனைக் கட்டுகிறார்கள். அது போதாது. இவர்களுக்கும் இத்தகைய வசதியைச் செய்து தர வேண்டும். வடகரை, தென் கரை போன்ற

1984 மார்ச் 14] [திரு. க. அருணாசலம்]

இடங்களில் வசிப்பவர்களுக்கும் இந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டும். நம்முடைய அரசுக்கு இதனால் புகழ் ஏற்படலாம். எதிர்காலத்திலாவது இதைச் செய்ய வேண்டுமென்ற நம்பிக்கையில் இதை நான் சொல்லுகிறேன்.

அடுத்து, இங்கே நேற்றையதினம் புது வரி விதிப்பு பற்றிச் சொன்னார்கள். சுவாரசியமாக நேற்று இந்த அவையிலே விவாதம் நடந்தது. மாநில மத்திய அரசு உறவுகள்பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. நமக்கு 'யூனியன் லிஸ்ட்' என்ற ஒன்று இருக்கிறது. "ஸ்டேட் லிஸ்ட்" என்ற ஒன்று இருக்கிறது. அதோடுகூட 'கன்கரன்ட் லிஸ்ட்' என்ற ஒன்று இருக்கிறது. இதை கூட்டாட்சி என்று மத்தியிலுள்ளவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. யூனியன் ஆட்சி என்றுதான் சொல்கிறார்கள். நமது நாட்டுக்குக் கூட்டாட்சி தான் சிறந்தது என்று சொல்லித்தான் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள்கூட பெரும் பணி செய்திருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்கள் இதற்காகவே தன்னுடைய முழு பலத்தையும், ஆற்றலையும் செலவிட்டார்கள். இன்னும் கூட்டாட்சி ஏற்பட வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற கட்சியும் இதர கட்சியினரும் இந்த நாட்டிலே கூட்டாட்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் பணி செய்துகொண்டு வருகிறார்கள். நிலைமை இப்படியிருக்க எதிர்க்கட்சியினர் அவர்களுடைய கொள்கையை வற்புறுத்தி தமிழக அரசு அக்கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று பேசுகிறார்கள். இதை வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்று சொல்கிற

(முற்பகல் 10—00)

நண்பர்கள் வன்முறையிலே நம்பிக்கையுள்ளவர்கள். மத்திய அரசு பலமுள்ளதாக இருக்க வேண்டுமென்ற நம்பிக்கையால் இதைச் சொல்கிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் நம்முடைய அரசு 'இனிய உளவாக இன்னாது கூறல்' என்ற திருக்குறளையொட்டி, அதைக் கண்டித்திருக்கிறார்கள். அப்படிபட்ட வன்முறைகளைக் கண்டித்து பலமுறை இங்கேயும் எடுத்துக் காட்டியிருக்கிறோம் என்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த முயற்சி தொடர்ந்து நடக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு பகுதியாக இதை எடுத்துப் பார்த்தால், நம்முடைய நிதிநிலை அறிக்கை பற்றிய புள்ளி விவரங்களை இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த உரையில் நிறைய குணம் இருப்பது நல்லது. அதைப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால் அதிலுள்ள குறைகளையும் கண்டுபிடிக்க அதற்காக நாம் சிறிது சிரமங்களை எடுத்துக் கொண்டால், வருகிற ஆண்டுகளிலாவது அந்தக் குறைகளைப் போக்கிக்கொள்ளலாம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் சத்துணவுத் திட்டம் என்ற ஒன்றைச் சேர்த்திருக் கிறார்கள். இந்த வருடம் விசேஷமாக 11 வயது முதல் 15 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கும் இந்தச் சத்துணவைப் போட ரூபாய் 20 கோடி புதிதாகச் சேர்க்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சேர்த்து உரிய காலத்தில் அது அமலாக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சத்துணவை அந்த வயதுள்ளவர்களுக்குப் போடுவதால், கல்வித் திறன் அதிகரிக் குமா என்று சொல்லவில்லை. சத்துணவால் ஏற்படும் ஆற்றல் மூலம் அவர் களைப் பயனுள்ள வகையில் அழைத்துச் செல்கிறோமா என்று பார்க்க வேண்டும். இப்போது கல்வித் துறையில் தொழில் கல்வியை நாம் புகுத்தி அதன் மூலம் தொழில் கல்வியைக் கற்றுக் கொடுக்க இந்த அரசு முயன்று வரு கிறது. அதைப் பாராட்டுகிறேன். ஆனால் சத்துணவை 15 வயது வரை யில் போடுவதால், அவர்களுடைய உழைக்கும் திறன் கெட்டுப்போய், அவர் களைக் கையாலாகாதவர்களாக ஆக்குவது, அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது போன்ற துன்பங்கள் ஏற்படுமா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அந்த வகையில் சத்துணவுத் திட்டத்தை 15 வயதானவர் களுக்குக் கூட விரிவுபடுத்த வேண்டுமா என்பதைப்பற்றிச் சரியான முறையில் சிந்திக்க வேண்டும். 15 வயதானவர்களைக் கையாலாகாதவர்களாக இந்தத் திட்டம் ஆக்காதா என்று கேட்க விரும்புகிறேன். 20 கோடி ரூபாய் அளவுககு சத்துணவு சாப்பிடுவதன் மூலம் உண்டாக்கப்படும் ஆற்றலை பயனுள்ள வகை யில் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு பயன்படுத்த திட்டம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இல்லாவிட்டால் சத்துணவால் கிடைக்கும் ஆற்றல் வீணாகப் போய்விடும். அரசாங்கம் போடுகிற கொள்கைகள் ஒன்றோடென்று சம்பந்தப்பட்டவைகளாக இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால், நம் முடைய முன்னேற்றமே சந்தேகத்துக்குரியதாக ஆகிவிடும். ஏற்கெனவேயே வறுமையில் வாடுகிறவர்கள் அதிகமாக நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர் களுக்கு வாங்கும் சக்தி குறைவாக இருக்கிறது. வாங்கும் சக்தி குறைவாக இருக்கிறது என்று சொன்னால், உற்பத்தி குறைவாக இருப்பதாகத்தான் பொருள். உற்பத்தி செய்பவர்கள் உபயோகப்படுத்துகிறவர்களுக்காகவும், உப யோகப்படுத்துகிறவர்கள் உற்பத்தி செய்கிறவர்கள் நலனுக்காகவும் பாடுபட வேண்டும். குடிசைகளிலும், கிராமங்களிலும் கைத்தொழில் அபிவிருத்தி ஏற் படவேண்டும். அதற்குத் தக்கவாறு அரசாங்கம் திட்டங்கள் போட வேண்டும் எதற்கெடுத்தாலும் மத்திய அரசைக் குறை சொல்கிறோம். நம்மிடம் நிலம் இருக்கிறது. ஆள் பலம் இருக்கிறது. மக்கள் இருக்கிறார்கள். இதைப் பயன்படுத்த முடியாதா? ஒரு பக்கத்தில் தொழில் கல்வியை கல்வித் துறை பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த இரண்டையும் ஒன்றாக்க வேண்டும். புதிய துறைகள் வேண்டுமென்று நேற்றுகூட இங்கே பேசியவர்கள் சொன்னார்

கள். சத்துணவுத் திட்டத்திற்கு ஒரு புதிய துறை வர வேண்டும். அது இப்போது கல்வித் துறையோடும் நல்வாழ்வுத் துறையோடும் கலந்து இருக்கிறது. தனித்தனியாக அவைகள் இருந்தால், ஒன்றோடொன்று புரிந்து கொண்டு வாழ்வாங்கு வாழ வழியிருக்கும். நம்முடைய ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்த அதிகாரம் வேண்டுமென்று மத்திய அரசிடம் வாதாட வேண்டும். நம்மிடம் நிலம் இல்லையா, ஆள் இல்லையா? எல்லாம் இங்கே தான் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி தொழில்களைப் பெருக்க வேண்டும். பல தொழில்களுக்கான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிறது. அதை அவர்களிடம் சொல்லி, எப்படி கூட்டாட்சிக்காக பாடுபடுகிறோமோ அதைப்போல நாமும் உற்பத்தியைப் பெருக்க பாடுபட வேண்டும்.

கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே தீப்பெட்டித் தொழிலில் பெரிய நிறுவனங்கள் ஈடுபடக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் பெரிய 'லாபி'யாக அதிலும் குறிப்பாக பண பலம் உள்ளவர்களாக இருப்பதன் காரணமாகவும், நமக்கு வேறு பல காரியங்களுக்காகப் பணம் தேவைப்படுவதாலும் அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றுதான் நான் நினைக்கிறேன்.

அண்மையில் போக்குவரத்துத் துறையை தேசிய மயமாக்குவது குறித்து இங்கே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்கள். தேசியமயமாக்கும் கொள்கையை நாம் எவ்வாறு தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது என்பதையும் குறிப்பிட்டார். அரசாங்கத்தின் முக்கியமான பணியே மக்களுக்கு வேண்டியதைச் செய்வதுதான் என்று மிக அழகாக அன்று தெளிவு படுத்தினார்கள். கிராமத்தில் இருக்கிற மக்கள் ஒரு இடத்தில் போக்குவரத்து வசதி வேண்டுமென்று கேட்டால், அதனால் லாபம் கிடைக்குமா கிடைக்காதா என்று பார்க்காமல், மக்களுக்கு எது சௌகரியத்தை உண்டு பண்ணுமோ அதைச் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், நாம் ஒன்றை மறந்து விடக்கூடாது. கிராமத்தில் உள்ள மக்கள் பேருந்துகளை மட்டுமே நம்பி வாழ்வதில்லை. பெரும்பாலான மக்கள் கிராமங்களில் மாட்டு வண்டிகளையே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் மாட்டு வண்டிகளை உபயோகப்படுத்தித்தான் தங்களின் பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு போகவும், சந்தைகளிலிருந்து பொருள்களைத் தங்கள் இடத்திற்குக் கொண்டு வரவும் செய்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்குப் பயன்படுத்தப்படும் மாட்டு வண்டிகளைப்பற்றி நாம் ஏதாவது ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறோமா? ரிசர்ச் அண்டு டேவலப்மெண்ட் துறை இதைப்பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்கிறதா? மாடுகளைப் பராமரிக்க நாம் ஏதாவது ஆராய்ச்சிகளைச் செய்கிறோமா என்றால் இல்லை. மாட்டைப்பற்றிக் கவனிப்பவர்கள் ஒரு துறையைச் சார்ந்

தவர்களாகவும், வண்டியைப்பற்றி கவனிப்பவர்கள் வேறு துறையினராகவும், ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்கள் வேறு துறையினராகவும் இப்படி மூன்று வெவ்வேறு துறையினராக இருப்பதால், இதில் ஒரு முன்னேற்றமும் நம்மால் காண முடியவில்லை. எனவேதான் நம்முடைய ஆற்றல் எல்லாம் குறைந்து கொண்டே போய் நாம் கீழே போய்க் கொண்டிருக்கிறோம். எனவே போக்கு வரத்து குறித்து ஆராய்ச்சி செய்கிற துறை, நல்வாழ்வு பற்றி ஆராய்ச்சி செய்கிற துறை ஆகியவைகள் எல்லாம் ஒன்றாக இணைந்து செயல்பட்டால்தான், நாம் போடுகிற ரஸ்தாக்களானாலும் சரி வேறு எதுவானாலும் உதவியாக இருக்கும்.

எல்லோரும் 'மாடர்னிடி' பற்றிப் பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்கள்கூட இங்கே அவையில் பேசும் போது ஒன்றை விளக்கமாகக் குறிப்பிட்டார். அதாவது பாலியஸ்டர் துணி வந்ததன் காரணமாக நம்முடைய கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் இருக்கின்றன என்றும், அதன் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். பாலியஸ்டர் நல்லது என்று சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் வேலைவாய்ப்பு என்ற அடிப்படையில் பார்க்கும்போது, பலருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிற வகையில் நாம் பார்க்க வேண்டும். எனவே இவைகளைப்பற்றியெல்லாம் அரசு தீவிரமாக ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1983-84-ல் இறுதிப் பற்றாக்குறையாக ரூ. 129 கோடி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதையும் சேர்த்துத் தான் 1984-85-க்கும் திட்டமிடுகிறோம். அப்படி அதைச் சேர்த்து திட்டமிடுகிறபோது வரி போட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. வரியைப் போடத்தான் வேண்டும். ஆனால் அப்படிப் போடுவதிலும் மக்களுக்கு மிகவும் பளு இல்லாமல் போட வேண்டும். வரியே இல்லாமல் கூட அரசாங்கத்தை நடத்த முடியும். ஆனால் வரி போட வேண்டிய நிலை ஏற்படும்போது, சரியான முறையில் வரி போட வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, நமது மாநிலத்திற்கு வரக்கூடிய மிகப் பெரிய வருவாய் இனம் கள்ளு சாராயக் கடைகள் மூலமாக வருகிற கலால் வரி. இவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாய் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது. அடுத்து லாட்டரி சீட்டிலிருந்தும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. இப்படிப்பட்ட பஞ்சமா பாதகங்களைப் பயன்படுத்தித்தான் நாம் நம்முடைய மாநிலத்தின் வருவாயை அதிகரித்து அதன் மூலம் கிடைக்கிற பணத்தைக் கொண்டு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமா என்று பார்க்க வேண்டும். யாரைக் கெடுத்து விடுகிறோமோ அவர்களுடைய நல்வாழ்விற்காக

காரியமாற்றுவதற்கு இந்த வழியைத்தான் பின்பற்ற வேண்டுமா என்று அரசு யோசிக்க வேண்டும். இப்போது அதையெல்லாம் கட்டுப்படுத்த அரசு விரும்புகிறது என்று சொல்லப்படுகிறது. அதைச் சிக்கிரமாகக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். லாட்டரி சீட்டுக்கள் போன்ற இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தி அல்லது இல்லாமல் செய்து நம் மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்கள் எதிர்காலத்திலாவது அரசாங்கத்தாலே கொண்டு வரப்படும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் இப்போது நாம் போய்க் கொண்டிருக்கிற திசையிலிருந்து மக்களை மாற்றி, கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் இந்த ஆர்வத்தைக் குறைத்து நம்முடைய மக்களின் வருவாயைப் பெருக்கவும், அவர்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவுமான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாக வேண்டும்.

முற்காலத்தில், சோழர் காலத்தில் எல்லாம் தமிழர்கள் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. பின்னாலேதான் இத்தகைய பின்னடைவு ஏற்பட்டது. என்னுடைய நண்பர் ஒருவர் லண்டனில் உள்ள 'ஆர்கெய்விஸ்'ல் ஒரு ஆராய்ச்சி நடத்தி 1800 ஆம் ஆண்டுக்கு முன்னால் நாம் தமிழகத்தில் மிகச் சிறந்த வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்ததாகவும், அதற்குப் பின்னால் வெள்ளையர்கள் இங்கே வந்து இந்தியன் டெக்னாலஜியை அதிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டு டெக்னாலஜியைக் கொண்டு போய்த்தான் அவர்களுடைய டெக்னாலஜியை வளர்த்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

(முற்பகல் 10-10)

அதனாலே அவர்களுடைய டெக்னாலஜி வந்தால் அதைப் பார்த்து படித்துத் தெரிந்துகொள்வார்கள். ஜப்பானியர்கள் டெக்னாலஜியைப் பார்த்து பிரித்து வேகமாக பணியாற்றுகிறார்கள். அதைப் போலவே நம்முடைய பண்பாட்டின் அடிப்படையில், கலாச்சாரத்தின் அடிப்படையில், இந்த டெக்னாலஜியை மாற்ற வேண்டும். டெக்னாலஜி என்று சொல்லும்போது என்ஜினியரிங் டெக்னாலஜி ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள். சோசியல் சையன்ஸ் டெக்னாலஜி, சோசியல் ரிலேஷன்சிப் டெக்னாலஜியை எல்லாம் வளர்க்கலாம் என்று கருதித் தான் மகாத்மா காந்தி அவர்கள் "Ahimsa is a science" என்று சொன்னார்கள். சத்தியாகிரஹம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற முறையில் அவர் ஒரு டெக்னாலஜியை வகுத்துக் கொடுத்தார்கள். இப்போது எடுத்ததற்கெல்லாம் சத்தியாகிரஹம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த டெக்னாலஜிகளையெல்லாம் விரிவாக உயர் கல்வி நிலையங்களில் கொண்டுவர வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள், மதுரை பல்கலைக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபோது அவர் யோசித்து இந்த விஷயத்தை மாணவர்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று கருதி, சோசியல் டிப்ளமா என்பதையெல்லாம் வகுத்துக் கொடுத்தார்கள். இது கடந்த பத்தாண்டுக் காலமாக அங்கே நடந்து வருகிறது. மற்ற துறைகளிலே டிப்ளமா என்றால் ஜைன காலஜியில் இரண்டு டிப்ளமா, பொலிட்டிகல் சையன்சில் மூன்று டிப்ளமா என்று இருக்கும். காந்தி டிப்ளமா என்றால் இப்போது ஆயிரம் பேர்களுக்கு மேல் வாங்கியிருக்கிறார்கள். சிலர் இந்த டிப்ளமா ஏன் என்று கேட்கிறார்கள். மனிதனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும், மனித உறவுகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும், விடுதலைக்குப் பாடுபட்ட தேசத் தந்தை யார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று படித்தவர்கள் இதிலே நுழைகிறார்கள். இதையெல்லாம் உள்ளடக்கி மதுரை பல்கலைக் கழகத்தில் "M. Sc. in peace making" என்ற புதிய துறையைக் கொண்டு வந்தார்கள். இந்தத் துறையைத் துவங்கியபோது "பீஸ் மேக்கிங்குக்கு" நம் நாட்டில் என்னவிருக்கிறது, Peace எல்லாம் ருஷ்யாவில் இருக்கிறது, அங்கே படியுங்கள் என்று சொன்னார்கள். இது ஏன் வேண்டுமென்றால், நம்முடைய நாட்டில் "பீஸ் மேக்கிங்" பற்றி, மனிதனுடைய உறவு முறையைப் பற்றி, ஒரு மனிதனோடு மற்றொரு மனிதனுடைய உறவு எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றி இந்தப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு படிப்பு வேண்டுமென்று சொல்லி அதை எல்லோருக்கும் அனுப்பி இப்போது அந்தக் காரியம் அங்கே கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதிலே இன்னும் பிஎச்.டி. பண்ண வேண்டுமென்றும், யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் இதைப் பார்த்து, சிறப்பாக நடக்கும் இந்த விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்கிறார்கள். நம்முடைய அரசு இதிலே கொஞ்சம் அக்கறை செலுத்தியிருக்கிறது என்றாலும் இன்னும் அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அக்கறை செலுத்தினால் நம்முடைய பண்பாட்டை எல்லோரும் பார்த்து பின்பற்ற வழி வகுக்கும். சையன்ஸ் அண்டு டெக்னாலஜியைப் போல, என்ஜினியரிங் டெக்னாலஜியைப் போல மனித உறவிலே மனிதனுடைய கூட்டு வாழ்க்கையிலே டெக்னாலஜியைக் கொண்டுவர முடியும் என்று சொல்லி, அதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு. எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக மகிழ்ந்து இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, நான் சொன்னவைகளையெல்லாம் இந்த அரசு சரியாகப் பரிசீக்கும் என்று நம்பி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.